# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1771/19 - 2012 අගෝස්තු මස 15 වැනි බදාදා - 2012.08.15

*1771/19 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4/96.*

**2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டம்**

*2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் (எ) என்னும் பந்தியுடனும் 39 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் சூழல்துறை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சூழல்துறை அமைச்சர்,

கொழும்பு,
*2012, யூலை 30.*

ஒழுங்குவிதிகள்

*1.* இந்த ஒழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவத் திட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இந்த ஒழுங்குவிதிகள் இலங்கை ஆள்புல நீர்ப்பரப்பிலும் அல்லது 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கடற்துறை வலயங்கள் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கடற்துறை வலயத்தில் கப்பல்களுக்கும் கப்பல்களிலிருந்தும் எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடம்மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கப்பற் துறைமுகங்கள், துறைமுக முடிவிடங்கள் கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலைகள், துறைமுக மேடைகள், குழாய் இணைப்புகள் அல்லது வேறு எவையேனும் கருவிகள் அத்துடன் கரைக்கப்பாலுள்ள நிறுவுகைகள் என்பவற்றின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், தலைவன் அல்லது அவற்றின் முகவர்கள் அல்லது வேறு எவரேனும் ஆள் ஒவ்வொருவருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*3.* இந்த ஒழுங்குவிதிகள் -

(i) ஒரு துறைமுகத்தின் கப்பற் துறைமுகத்தின், துறைமுக முடிவிடத்தின், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலைகளின் அல்லது துறைமுக மேடையின், அல்லது

(ii) ஒரு கப்பலுக்கும் கப்பலிலிருந்தும் எண்ணெய்யைக் கைமாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் குழாய் இணைப்பின் அல்லது வேறு கருவியின்,

(iii) எண்ணெய்யைப் பெறுவதற்கும் மாற்றம் செய்வதற்கும் பயன்படுத்தப்படும் கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றின்

சொந்தக்காரருக்கு, தொழிற்படுத்துநருக்கு, தலைவனுக்கு அல்லது முகவருக்கு ஏற்புடைத்தாகின்றனவோ அந்தச் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், தலைவன் அல்லது முகவர் ஒவ்வொருவரும் (இதனகத்துப்பின்னர் “அதிகாரி” எனக்குறிப்பீடுசெய்யப்படுவார்) கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் காலத்துக்குக்காலம் தயாரிக்கப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டு அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டமொன்றை உடைமையில் வைத்திருக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*4.* எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடம்மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கப்பற் துறைமுகம், துறைமுக முடிவிடம், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலை, துறைமுக மேடை, குழாய் இணைப்பு அல்லது வேறு ஏதேனும் கருவி அத்துடன் கரைக்காப்பாலுள்ள நிறுவுகை ஒவ்வொன்றுக்கும் புறம்பான திட்டமொன்றிருத்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் -

(i) அதிகாரசபையால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பினுள்ள கப்பற் துறைமுகங்கள், துறைமுகமுடிவிடங்கள், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலைகள் அல்லது துறைமுக மேடைகள் என்பவற்றிற்கிடையே,

(ii) கரைக்கப்பாலுள்ள நிறுவுகைகளுடன் அல்லது எண்ணெய்யைக் கையாளும் வசதிகளுடன் தொடர்புடைய குழாய் இணைப்புகளை உள்ளடக்கிய அத்தகைய நிறுவுகைகள் அல்லது வசதிகள் தொடர்பில்

கூட்டுத்திட்டங்கள் ஆக்கப்படலாம்.

*5.* எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடம்மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கப்பற் துறைமுகத்தின், துறைமுக முடிவிடத்தின், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலையின், துறைமுக மேடையின், குழாய் இணைப்பின் அல்லது வேறு கருவியின் அத்துடன் கரைக்காப்பாலுள்ள நிறுவுகைகளின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர் அல்லது முகவர் ஒவ்வொருவரும் 10 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க அதிகாரசபையின் அங்கீகாரத்திற்கென எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டமொன்றை அதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*6.* இந்த ஒழுங்குவிதி நடைமுறைக்கு வந்ததன் பின்னர் பணியாற்றத் தொடங்குகின்ற -

(i) துறைமுகத்திற்கு, கப்பற்துறைமுகத்திற்கு, முடிவிடத்திற்கு, கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலைக்கு, துறைமுக மேடைக்கு,

(ii) எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடம்மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் குழாய் இணைப்பிற்கு அல்லது வேறு கருவிக்கு அத்துடன் கரைக்கப்பாலுள்ள நிறுவுகைக்கு, அல்லது

(iii) எண்ணெய்க்காக துளைத்தல் அல்லது தோண்டுதல் உட்பட கப்பலொன்றுக்கும் அதிலிருந்தும் எண்ணெய்யை இடம்மாற்றம் செய்வதற்கான வேறு கருவிக்கு

பொறுப்பாயுள்ள ஆளெவரும் அத்தகைய பணியைத் தொடக்கும் திகதிக்கு முன்னர் இரண்டு மாதங்களுக்குள் அதிகாரசபைக்கு எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டமொன்றை அதிகாரசபைக்கு சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*7.* எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் துறைமுகத்தின் கப்பற்துறைமுகத்தின், முடிவிடத்தின், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலையின், துறைமுகமேடையின், குழாய் இணைப்பின் அல்லது வேறு ஏதேனும் கருவியின் அத்துடன் கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் சொந்தக்காரர், தொழிற்படுத்துனர், முகவர் ஒவ்வொருவரும் -

(i) இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாமல் அல்லது அதிகாரசபையால் பணிக்கப்பட்டவாறும் பணிக்கப்பட்டபோதும் அதன் அங்கீகரிக்கப்பட்ட எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தை மீளாய்வு செய்தல் வேண்டும்,

(ii) உளதாம் திட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையை அல்லது பயனுறுதியாகும் தன்மையைப் பாதிக்கும் அல்லது பாதிக்கக்கூடிய பாரிய மாற்றம் நிகழுமிடத்து அத்திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் புதிய திட்டத்தை அல்லது உளதாம் திட்டத்திற்கான திருத்தங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*8.* பந்தி 5,6 அல்லது 7 என்பதன்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் திட்டம் அல்லது திருத்தம்

(i) அப்போதைக்கு வலுவிலுள்ள எண்ணெய் ஒழுக்கு சார்ந்த தேசிய எதிர்பாரா சம்பவம் தொடர்பான தேசிய திட்டத்துடன் ஒத்திசைவில்லை என, அல்லது

(ii) எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடம்மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் துறைமுகத்தின், கப்பல் துறைமுகத்தின், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலையின், துறைமுக மேடையின், குழாய் இணைப்பின் அல்லது வேறு ஏதேனும் கருவியின் அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், தலைவன் அல்லது முகவர் எந்த இடப்பரப்பில் தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிக்கின்றாரோ அந்த இடப்பரப்பில் நிகழக்கூடிய எண்ணெய்த் தீழ்ப்புச்சார்ந்த சம்பவங்களைக் கையாள்வதற்குத் தோதானதல்ல என

அதிகார சபை அபிப்பிராயப்படுத்துமிடத்து அதிகாரசபை துறைமுகத்தின், கப்பற் துறைமுகத்தின், முடிவிடத்தின், கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலையின், துறைமுகமேடையின், குழாய் இணைப்பின் அல்லது வேறு கருவியின் அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் சொந்தக்காரருடனான, தொழிற்படுத்துநருடனான அல்லது முகவருடனான கலந்தாலோசனையுடன் திட்டம் அதற்கிணங்க திருத்தப்பட வேண்டுமெனப் பணிக்கலாம். அத்தகைய பணிப்பிற்கிணங்க திட்டத்தைத் திருத்துவது சொந்தக்காரரின், தொழிற்படத்துநரின் அல்லது முகவரின் கடமையாதல் வேண்டும்.

9. அதிகாரசபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் திட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட இடத்தையும் ஒத்திசைவு உபகரணத்தையும் பரிசீலனை செய்து திட்டம் எண்ணெய் ஒழுக்குசார்ந்த தேசிய எதிர்பாரா சம்பவம் தொடர்பான தேசிய திட்டத்தின் ஒத்திசைவு பற்றி மற்றும் இதற்கான அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுடன் ஒத்திசைவாதல் தொடர்பில் தம்மை திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

10. எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டம் ஒன்றின் அங்கீகாரத்தை நாடும் விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் -

(அ) ஒழுங்குவிதி 6 மற்றும் 8 என்பவற்றிற்கமைய விண்ணப்பத்தை அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்துடன் சேர்த்து 5 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி இணைப்பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும், அத்துடன்

(ஆ) அதிகார சபை -

(i) விண்ணப்பம் தொடர்பில் அதன் முடிவை எடுப்பதனை இயலச் செய்வதற்கு அதிகாரசபையால் தேவைப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் தகவலையும், அத்துடன்

(ii) இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டையும்

சமர்ப்பித்தல் வேண்டும்.

11.(அ) எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டம் தொடர்பில் இந்த ஒழுங்குவிதிகளுக்கான 10 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இருபது நாட்களுக்குள் அதிகாரசபை சபையால் எடுக்கப்பட்ட முடிவு விண்ணப்பதாரர் ஒவ்வொருவருக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பகாரர் அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தின் அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கிடைக்கப்பெறுமிடத்து அவர் எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தின் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கிடைக்கப்பெற்ற பதினாலு நாட்களுக்குள் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(இ) இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணம் கிடைக்கப்பெற்றதன் மீது அதிகாரசபை இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் முறைசார்ந்த அங்கீகாரத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்.

12. ஒழுங்குவிதி 3 இல் குறித்துரைக்கப்பட்ட வசதியொன்றின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், தலைவன் அல்லது முகவர் ஒவ்வொருவரும் -

(i) அத்தகைய எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தை பார்வையிடுவதற்காக அதிகார சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு (இதனகத்துப்பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கிடைக்கச் செய்வித்தல் வேண்டும்.

(ii) எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் துறைமுகத்தை, கப்பற் துறைமுகத்தை, முடிவிடத்தை, கப்பல்கள் பழுதுபார்க்கும் சாலையை, அல்லது கப்பல் துறைமுக மேடையை, குழாய் இணைப்புகளை அல்லது வேறு ஏதேனும் கருவியை அத்துடன் கரைக்ப்பாலுள்ள நிறுவுகையைப் பார்வையிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அணுக்கம் அளித்தல் வேண்டும்,

(iii) திட்டத்தையும் தேவைப்படுத்தப்பட்ட வேறு கருவியையும் எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான தேசிய திட்டத்துடன் ஒத்திசைவாகப் பேணுதல் வேண்டும்.

13. எண்ணெய் ஒழுக்கு அல்லது எண்ணெய்த் தீழ்ப்பொன்று நிகழுமிடத்து, அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட அதன் எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தை நடைமுறைப்படுத்துவது எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் துறைமுகத்தின், கப்பற் துறைமுகத்தின், முடிவிடத்தின், கப்பல்களின், கப்பற் தளத்தின், துறைமுக மேடையின், குழாய் இணைப்பின், அல்லது வேறு ஏதேனும் கருவியின் அத்துடன் கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் சொந்தக்காரர், தொழிற்படுநர், தலைவன், அல்லது முகவர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

*14.(அ) ஒழுங்குவிதி 10 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் அங்கீகரிக்கப்படாவிடில், அல்லது*

*(ஆ) ஒழுங்குவிதி II இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமையின் காரணமாக அல்லது எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான தேசிய திட்டத்துடன் ஒத்திசையாமையின் காரணமாக இல்லாதொழிக்கப்படுமாயின்*

*அதிகாரசபை அங்கீகாரமளிக்கப்படாமைக்கான அல்லது இல்லாதொழித்தலுக்கான அத்தகைய காரணங்களை எடுத்துரைத்து திட்டத்தின்மீது அதிகாரம் கொண்டுள்ள ஆளுக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அங்கீகாரத்திற்குத் தகைமை பெறுவதற்கு திருப்திப்படுத்தப்படுவதற்கான அல்லது இணங்கியொழுகுவதற்கான தேவைப்பாடுகளைக் குறித்துரைத்தலும் வேண்டும்.*

*15. சட்டத்தின்மீது அதிகாரம் கொண்டுள்ள ஆள் அறிவிப்பு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் புதிய அல்லது விதந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் உட்புகுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்பட்ட திட்டமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். இக்காலப்பகுதியில் திருத்தங்களுக்கு அமைவான உளதாம் திட்டம் இறுதி அங்கீகாரம் முடிவுறாதிருக்கையில் பயனுறுதி கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*ஆயின், எவ்வாறாயினும், இல்லாதொழித்தலின் காரணமாக புதிய விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரர் அதிகாரசபையால் தீர்மானிக்கப்பட்டவாறு அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படலாம்.*

*16. எண்ணெயை இடமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் துறைமுகம், கப்பற் துறைமுகம், கப்பல்களைப் பழுதுபார்க்கும்சாலை, துறைமுகமேடை, குழாய் இணைப்புகள், வேறு ஏதேனும் கருவி அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகை அல்லது எண்ணெய்யைப் பெறுவதற்கு அல்லது இடமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கரைக்கப்பாலுள்ள நிறுவுகை எதுவும், அங்கீகாரத்திற்காக அதன் எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டம் அங்கீகாரத்திற்கான அங்கீகாரத்தை இரண்டாம் முறையும் பெறத் தவறுமாயின் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளிலும் 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கடற்துறை வலயங்கள் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏனைய கடற்துறை வலயங்களிலும் தொழிற்படுத்துதலாகாது.*

*17. திட்டத்தின்மீது அதிகாரம் கொண்டுள்ள ஆள் எதிர்பாரா சம்பவத்திட்டம் தொடர்பில் அதிகாரசபையால் எடுக்கப்பட்ட முடிவுக்கெதிராக சூழல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க மேன்முறையீடு செய்யலாம் -*

*(1) திட்டம் வைத்திருப்பவர் அங்கீகார மறுப்பு அல்லது அங்கீகாரம் இல்லாதொழிக்கப்பட்டமை பற்றிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற பதினைந்து நாட்களுக்குள் மறுபரிசீலனை செய்வதற்கான காரணங்களைக் கொடுத்து எழுத்திலான மேன்முறை யீடொன்றைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் கைவசமிருக்குமாயின் திட்டம் தொடர்பாக செய்யப்பட்ட முடிவை எதிர்த்துரைப்பதற்கான சான்றையும் வழங்கலாம்,*

*(2) செயலாளர் இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்திக்கிணங்க தரப்பட்ட நிகழ்வுகளை கருத்திற்கொண்ட பின்னர் முடிவை இல்லாதொழித்து திட்டத்தை அங்கீகரிக்கலாம் அல்லது முடிவை உறுதிப்படுத்தலாம்.*

*18. (1) எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான ஆள் எண்ணெய் ஒழுக்கு ஒவ்வொன்றினதும் விவரங்களைப் பதிவு செய்தலும் ஒழுக்கின் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பதிவுகளைப் பேணுதலும் வேண்டும் என்பதுடன் இக்காலப்பகுதியின்போது அதன்பொருட்டு அதிகாரசபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபையின் அலுவலர் ஒருவரின் வேண்டுகோளின்மீது பார்வைக்கு கிடைக்கச் செய்வித்தலும் வேண்டும்.*

*(2) பதிவு பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-*

*(அ) தீழ்ப்பு விடுவிக்கப்பட்ட திகதி, நேரம், அமைவிடம் அத்துடன் காலக்கெடு.*

*(ஆ) விடுவிக்கப்பட்ட தீழ்ப்பின் அடையாளம்,*

*(இ) விடுவிக்கப்பட்ட தீழ்ப்பின் தொகை,*

*(ஈ) ஒழுக்கின் சூழ்நிலைகளும் காரணமும்,*

*(உ) கட்டுப்படுத்துதலினதும் சுத்திகரிப்பு முயற்சிகளினதும் விவரங்கள்,*

*(ஊ) கட்டுப்படுத்துதலினதும் சுத்திகரிப்பு முயற்சிகளினதும் கணிப்பீடு,*

*(எ) ஒழுக்கின் விளைவாக அவதானிக்கப்பட்ட எவையேனும் பாதகமான பயன்கள்.*

*19.* சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவங்கள் தொடர்பான தேசியத் திட்டம்" என்பது 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (எ) என்னும் பந்தியைப் பின்பற்றி கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் காலத்துக்குக் காலம் தயாரிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்ட எண்ணெய்த் தீழ்ப்பு சம்பவத்திற்கான எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான தேசிய திட்டம் எனப் பொருள்படும்,

"எண்ணெய்யைக் கையாளும் வசதி" என்பது எண்ணெய்த் தீழ்ப்பு சார்ந்த சம்பவத்தின் எதிர்மறை விளைவை ஏற்படுத்தும் சாத்தியமுள்ள வசதியொன்று எனப் பொருள்படுவதுடன் ஏனையவற்றுடன் எண்ணெய்யைக் கையாள்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு எண்ணெய் முடிவிடத்தையும் குழாய் இணைப்பையும் வேறு ஏதேனும் வசதிகளையும் உள்ளடக்கும், ஆனால் கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றை உள்ளடக்கமாட்டாது,

"எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டம்" என்பது (எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான தேசிய திட்டத்தைத் தவிர) எண்ணெய்யால் கடல்சார் தீழ்ப்பை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களுக்கு அத்தகைய தீழ்ப்பைத் தடைசெய்யும் அல்லது குறைக்கும் அல்லது அதன் தாக்கத்தை சொற்பமாக்கும் நோக்கத்துடன் எதிர்ச் செயற்பாட்டிற்கான ஏற்பாடுகளை குறித்துரைக்கும் எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டம் எனப் பொருள்படும்,

"எண்ணெய்த் தீழ்ப்பு சார்ந்த சம்பவம்" என்பது எண்ணெய்யின் வெளியேற்றத்தை விளைவிக்கக்கூடியதும் கடல்சார் சூழலுக்கு அல்லது கரையோரப் பகுதிக்கு அச்சுறுத்துதலொன்றாக அமையும் அல்லது அமையக்கூடியதுமான அதே மூலத்தைக் கொண்டதும் அல்லது இலங்கையின் நலன்களுடன் தொடர்புடையதும் அவசர நடவடிக்கையை அல்லது வேறு உடனடி எதிர்வினையை தேவைப்படுத்துவதுமான நிகழ்வொன்று அல்லது நிகழ்வுத் தொடரொன்று எனப் பொருள்படும்.

(ஒழுங்குவிதி 9)

**அட்டவணை I**

2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டம்

***எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்திற்கான வழிகாட்டுநெறிகள்***

*1.* எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டம் ஒவ்வொன்றும் (இதனகத்துப்பின்னர் "எ.ஒ.எ.தி (OSCP) எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) செயல்நுணுக்கப் பிரிவு
(ஆ) செயற்பாட்டுப் பிரிவு
(இ) தரவுப் பிரிவு

*2.* எ.ஒ.எ.தி (OSCP) ஒவ்வொன்றும் பின்வருவனபற்றிய அத்தியாவசியமான தகவலை உள்ளடக்குதல் வேண்டும்.

(அ) பொறுப்புடைய அதிகாரியின் விவரங்களும் திட்டத்தின் தொழிற்பாட்டு எல்லையும்,

(ஆ) எண்ணெய்ஒழுக்கின் எதிர்மறை விளைவை இனம்காணல்) போதியளவு எதிர்மறை விளைவுக் கணிப்பீட்டிற்கான சான்று)

(இ) உள்ளூர் சூழல்சார்ந்த நுண்ணுனர் திறன் பற்றிய விவரங்கள் (நுண்ணுணர் திறன்கொண்ட இடப்பரப்புகள், இனம் காணல், முந்துரிமையளித்தல்)

(ஈ) முன்கூட்டி உடன்பட்டுக் கொள்ளப்பட்ட எதிர்வினை செயல்நுணுக்கங்கள்

(உ) எதிர்வினை ஒழுங்கமைப்பின் உருவரைக் குறிப்பும் பொறுப்புக்களின் விவரங்களும்,

(ஊ) பயிற்சியும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் திட்டத்திற்கான மீளாய்வு நடைமுறைகளும்,

(எ) அறிவித்தல் நடைமுறைகள்,

(ஏ) தொடர்பாடல் திட்டங்கள் - உள்ளகமும் வெளிப்புறமும்

(ஐ) ஆட்களை அணிதிரட்டுவதற்கான நடைமுறையும் உபகரணமும்,

(ஒ) நிதி முகாமைத்துவம், செலவுகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் பின் தொடர்தல் உட்பட ;

(ஓ) எதிர்வினை ஆற்றலை நிரற்படுத்துதல், (ஆளணியினரும் உபகரணமும்)

(ஔ) கையுதிர்ப்புத் திட்டமொன்று (எண்ணெய்த் தன்மையுள்ள சிதைவுகளை சுத்திகரித்தலும் கையுதிர்த்தலும்)

(க) சுத்திகரிக்கும் எதிர்வினையை முடிவுறுத்துதலுக்கான நடைமுறை,

(ங) நாளாதுவரை சீராக்குவதற்கும் மீளாய்வு செய்வதற்குமான முறைமை.

3. எ.ஒ.எ.தி (OSCP) பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்:-

(அ) திட்டம் ஒவ்வொன்றும் எண்ணெய் ஒழுக்குசார்ந்த சம்பவம் தொடர்பிலான எதிர்வினையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் பொறுப்புக்களையும் இனம் காணுதல் வேண்டும் -

(i) அறிவித்தல் பயிற்சி - ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை,

(ii) மேசை மீதான பயிற்சி - ஒவ்வோர் ஆண்டிலும் ஒரு முறை.

(iii) உபகரணங்களைக் கையாளும் பயிற்சி - இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை.

(ஆ) திட்டங்கள் கிரமமாக நாளதுவரை சீராக்கப்பட்டு குறைந்தபட்சம் ஈராண்டிற்கொரு முறையாவது மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். அல்லது சூழ்நிலைகள் அல்லது அதிகாரசபை தேவைப்படுத்தினால் அதற்குமுன்னர் எண்ணெய் ஒழுக்கு சார்ந்த சம்பவம் அல்லது பயிற்சி ஒவ்வொன்றின் பின்னரும் திட்டம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(இ) எ.ஒ.எ.தி (OSCP) தெளிவாகவும், சுருக்கமாகவும், எளிமையாகவும், பயன்படுத்துவதற்கு இலகுவானதாகவும் அதனைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மக்களால் விளங்கிக்கொள்ளக்கூடியதாகவுமிருத்தல் வேண்டும்.

(ஈ) எ.ஒ.எ.தி (OSCP) ஒவ்வொன்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு (இதனகத்துப்பின்னர் க.சூ.பா.அ. (MEPA) எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் க.சூ.பா.அ. வினால் (MEPA) அங்கீகாரமளிக்கப்படுதலும் வேண்டும். பின்னர் எவையேனும் திருத்தங்கள் தேவைப்படுத்தப்பட்டு பின்னர் திருத்தம் செய்யப்படின் அத்தகைய திருத்தங்கள் செய்யப்பட்ட ஒரு வாரத்திற்குள் க.சூ.பா.அ (MEPA) வுக்கு முழுமையாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(உ) க.சூ.பா.அ. (MEPA) எ.ஒ.எ.தி. யை (OSCP) அங்கீகரிக்க மறுக்குமிடத்து இயைபான நிறுவனம் க.சூ.பா.அ. வினால் (MEPA) அங்கீகாரம் மறுக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் எ.ஒ.எ.தி.யை (OSCP) திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தலும் க.சூ.பா.அ. வின் (MEPA) அங்கீகாரத்திற்கென மீளவும் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ஊ) ஆவணம் க.சூ.பா.அ. வினால் (MEPA) கிடைக்கப்பெற்ற 10 வேலை நாட்களுக்குள் எ.ஒ.எ.தி. க்கான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை தொடர்பாக க.சூ.பா.அ. (MEPA) சம்பந்தப்பட்ட முகவராண்மையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 10)

## அட்டவணை II

2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டம்

**எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தெடர்பான திட்டம்**

1. விண்ணப்பதாரரின் தகவல்

1.1 முகவராண்மையின்பெயர்

| |
|---|
| |

1.2 முகவரி

| |
|---|
| |

1.3 தொடர்பு விவரங்கள்

| | | |
|---|---|---|
| தொலைபேசி: | தொலைநகல்: | மின்னஞ்சல்: |

1.4 தொடர்பு கொள்ளும் ஆள்

| | | |
|---|---|---|
| பெயர்: | பதவிப்பெயர்: | |
| தொலைபேசி: | தொலைநகல்: | மின்னஞ்சல்: |

2. எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்திற்கு அங்கீகாரம் தேவைப்பட்ட வசதி/அமைவிடம்

2.1 வசதியின் அல்லது அமைவிடத்தின்பெயர்

| |
|---|
| |

2.2 முகவரி

| |
|---|
| |

3. கொடுப்பனவுகள்

3.1 நோக்கம்

1. விண்ணப்பக் கட்டணம்
2. அங்கீகாரக் கட்டணம்
3. கொடுப்பனவு புதுப்பித்தல் கட்டணம்

(அ) மீளாய்வின்றி
(ஆ) மீளாய்வுடன்

கொடுப்பனவு செய்யும் முறை: காசோலை/வங்கி வரைவு

தவிசாளர்/கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

............................................ ஆகிய நான் ......................................................... சார்பில் (கம்பனியின் பெயர்) பின்வருவனவற்றை இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

(1) ..................... இன் எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தின் இரண்டு பிரதிகள்
(2) கொடுப்பனவு மேலே 3இல் விதித்துரைக்கப்பட்டவாறு காசோலை/வங்கி வரைவின் மூலம்
(3) கம்பனி சொந்தமாகக் கொண்டுள்ள எதிர்ப்பு உபகரணத்தின் நிரல்
(4) பின்வருவோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை

(அ)
(ஆ)
(இ)

க.சூ.பா.அ. எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தில் நியதி நிபந்தனைகளின் உள்ளடக்கங்களைக் கவனமாக வாசித்தறிந்த நான் நியதி நிபந்தனைகளின் தேவைப்பாடுகளுடன் ஒத்திசைவதற்கு உடன்படுகின்றேன் என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

| | | |
|---|---|---|
| திகதி | விண்ணப்பதாரரின் கையொப்பம் | விண்ணப்பதாரரின் கையொப்பம் |
| | ............................. விண்ணப்பதாரரின் பெயர் | ................................ விண்ணப்பதாரரின் பெயர் |

(கம்பனியின் இலச்சினை)

Office only

1. செலுத்திய தொகை:
2. பொதுப் பற்றுச்சீட்டு இல.:
3. உரிமம் இல.:
4. உரிமம் வழங்கப்பட்ட/புதுப்பித்தலின் திகதி:
5. அவதானிப்புகரைகள்/குறிப்புரைகள்:

(ஒழுங்குவிதி 11)

**அட்டவணை III**

2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டம்

***விண்ணப்பதாரரிடமிருந்து அறவிடற்பாலதான கட்டணங்கள்***

கட்டணங்கள்:

| | | |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | ரூபா | 1000.00 |
| எ.ஒ.எ.தி. கட்டணம் | ரூபா | 50,000.00 |
| எ.ஒ.எ.தி. புதுப்பித்தல் கட்டணம் (மீளாய்வின்றி) | ரூபா | 40,000.00 |
| எ.ஒ.எ.தி. கட்டணம் புதுப்பித்தல் கட்டணம் (மீளாயவுடன்) | ரூபா | 50,000.00 |

(ஒழுங்குவிதி 11)

**அட்டவணை IV**

*2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டம்*

***எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தின் அங்கீகாரம்***

*2012 ஆம் ஆண்டின் ஆம் இலக்க எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி .................. ஆல் சமர்ப்பிக்கப்பட்ட ....................................................... காலப்பகுதிக்கான எண்ணெய் ஒழுக்கு சார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தை கீழே நிரற்படுத்தப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கமைய இத்தால் நான் அங்கீகரிக்கின்றேன்.*

*இந்த அங்கீகாரம் முடிவுறும் திகதிக்கு முன்னர் இந்த அதிகாரசபையால் வேறு வகையில் இல்லாதொழிக்கப்பட்டாலன்றி ............. முதல் .................... வரை வலுவிலிருத்தல் வேண்டும்.*

*தவிசாளர்/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்*
*கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை.*

*திகதி:*

***நியதி நிபந்தனைகள்***

*1. இந்த எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டம் கைமாற்றப்படக்கூடியதல்ல.*

*2. அங்கீகாரத்தை -*

*(அ)எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான திட்டத்தின் பணிகளும் கடமைகளும் போதியளவில் நிறைவேற்றப்படவில்லை, என அல்லது*

*( ஆ) 2012 ஆம் ஆண்டின் ................ ஆம் இலக்க எண்ணெய் ஒழுக்குசார்ந்த எதிர்பாரா சம்பவம் தொடர்பான எற்பாடுகளுடன் இணங்கியொழுகப்படவில்லை என*

*அது திருப்தியுற்றால் இல்லாதொழிப்பது அல்லது இடைநிறுத்துவது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு சட்டபூர்வமானதாதல் வேண்டும்.*

*8-833*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.